நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.77 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராஜேஷ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ஜான் பீட்டர் | : | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |
| கிராமம் | முத்துவீரகண்டியன்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 35 /2023 |

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச 317 பிரிவின்கீழ் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**நாள் : 05.12.2023**

**முதல் விசாரணை:**

**1)** நான் முத்துவீரகண்டியன்பட்டியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரியை தெரியும். கடந்த 02.11.2020ஆம் தேதியன்று எங்கள் ஊரில் கல்லறை திருவிழா. மதியம் 02.00-02.30 மணி அளவில் நானும், எனது அண்ணன் பஞ்சாயத்து போர்டு அருகே நின்று கொண்டிருந்தபோது எங்களை உரசுவதுபோன்று சென்றது. உடனே நாங்கள் ஏன் இவ்வாறு செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு காரை நிறுத்திவிட்டு வந்து மன்னிப்பு கேட்டார்கள். அப்போது எதிரி பாக்கியராஜ் என்பவர் என்னடா இங்கு பஞ்சாயத்து செய்கிறீர்கள் என்று கேட்டு காரை எடுக்கிறீர்களா இல்லையா என்று கேட்டு அருகில் இருந்த கல்லை எடுத்து கார் கண்ணாடியை உடைப்பதற்காக அவர் சென்றார். நாங்கள் விடுங்கள் என்று சொன்னதற்கு இடுப்பில் வைத்திருந்த அருவாளால் எனது அண்ணனின் இடது உள்ளங்கை பெருவிரல் அருகே வெட்டிவிட்டார்.

2) ஆஜர் எதிரி வினோலி என்பவர் அங்கு வந்து உங்களை கொல்லாமல்விடமாட்டேன் என்றும், என்றைக்கா இருந்தாலும் என் கையில்தான் உங்கள் சாவு என்று கொலைமிரட்டல் விட்டார். அதன் பிறகு பூதலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம், பின்பு TMCH மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)